DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 172/2022 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | பெரோஸ்கான் |
| **Father/Husband' Name** | ~ | முகமது சுலைமான் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 16.03.2026**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எதிரி நவநீதன் என்பவரை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் பத்து அல்லது 15 ஆண்டுகளாக தெரியும். எதிரிக்கு 2018 ஆம் ஆண்டு இரண்டு தவணைகளாக இரண்டு முறை ரூபாய் பத்து லட்சம் என எதிரிக்கு மொத்தமாக ரூ.20,00,000/– கொடுத்ததாக குறிப்பிட்ட நிலையில் எந்த தேதி மாதத்தில் மேற்படி தொகை கொடுத்தீர்கள் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி தொகை வட்டிக்கு கொடுத்தீரா என்றால் ஆமாம். 20 லட்சத்திற்கு நிரப்பப்படாத காசோலை அல்லது சொத்து பத்திரம் ஏதேனும் எதிரியிடமிருந்து பெற்றீரா என்றால் காசோலைகள் பெற்றேன். இரண்டு காசோலைகள் பெற்றீரா என்றால் ஆமாம். 20 லட்சம் தொகை எனது பொறுப்பில் இருந்த தொகை கொடுத்தீரா அல்லது வங்கியில் இருந்து ஏதேனும் பெற்று கொடுத்தீரா என்றால் எனது பொறுப்பில் இருந்த தொகை மற்றும் வேறு சிலரிடம் அரேஞ்ச் செய்து கொடுத்தேன்.

2. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் ஆமாம். அந்த வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த தொகை 20 லட்சத்தை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளீரா என்றால் அது பற்றி தெரியவில்லை.வங்கியில் இருந்து தொகை எடுத்து கொடுத்தது தொடர்பாக வங்கி கணக்கு புத்தகத்தை எதுவும் இவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2018 ஆம்

ஆண்டு எதிரிக்கு தொகை கொடுத்ததாக சொல்லும் நிலையில் அதன் பின்னிட்டு 2022-ம் தேதி காசோலை தாக்கல் செய்ததாக குறிப்பிட்ட நிலையில் மேற்படி இடைப்பட்ட நான்கு ஆண்டு காலத்தில் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எதிரி என்னிடம் இருந்து பெற்ற தொகை திருப்பி செலுத்தி விடுவதாக சொல்லி காலதாமதம் செய்து வந்தார். எதிரியின் நிரப்பப்படாத காசோலையில் நான் சங்கதிகள் பூர்த்தி செய்து அந்த காசோலையை தவறாக பயன்படுத்தி உள்ளேன் என்றால் இல்லை.

3. மேற்படி இடைப்பட்ட நான்கு ஆண்டு காலத்தில் எதிர் எனக்கு வட்டி சரியாக கொடுத்து வந்தாரா என்றால் இல்லை. சரியாக கொடுக்கவில்லை. நான் மேற்படி காசோலையில் 20 லட்சம் நிரப்பி தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரி என்னிடமிருந்து மேற்படி தொகை எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. காசோலை தொகைக்கு எனக்கும் எதிரிக்கும் இடையே எவ்வித பண பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால் இல்லை நான் கொடுத்த ரூபாய் பத்து லட்சம் மற்றும் 2வது தவணையாக கொடுத்த பத்து லட்சம் ஆகிய தொகைக்கு தான் எதிரி காசோலை கொடுத்துள்ளார்.நான் கந்து வட்டியாக தொகைகள் சேர்த்து மேற்படி காசோலையை நிரப்பி தாக்கல் செய்துள்ளீர் என்றால் இல்லை.அதிக வட்டி தொகைக்கு மேற்படி காசோலையை நிரப்பி தாக்கல் செய்துள்ளீர் என்றாலும் அந்த காசோலை தொகையானது சட்டபூர்வ கடன் தொகை கிடையாது என்றால் சரியல்ல. ரூபாய் இரண்டு லட்சத்திற்கும் அதிகமாக பண பரிவர்த்தனையானது வங்கி மூலமாக தான் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும் வருமான வரி சட்டத்தின்படி ரொக்கமாக பண பரிவர்த்தனை செய்யக்கூடாது என்றாலும் அதனால் மேற்படி நான் காசோலை தொகையானது பண பரிவர்த்தனை மூலம் ஏற்பட்டுள்ளது என்பது வருமான வரி சட்டத்தை மீறிய செயலாகும் என்றால் சரியல்ல.இவ்வழக்கின் எதிரி மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**
**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate, Pallavaram